லெனின்

1919 நவம்பர் 22ல் கிழக்கு மக்களது
கம்யூனிஸ்டு நிறுவனங்களின்
இரண்டாவது அனைத்துருஷ்யக் காங்கிரசில்
நிகழ்த்திய உரை



உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

141273

வி. இ. லெனின்

1919 நவம்பர் 22ல் கிழக்கு மக்களது கம்யூனிஸ்டு நிறுவனங்களின் இரண்டாவது அனைத்துருஷ்யக் காங்கிரசில் நிகழ்த்திய உரை

முன்னேற்றப் பதிப்பகம்

மாஸ்கோ · 1972

NEW CENTURY BOOK HOUSE (P) LTD.
20 Ps.
MADRAS-2

மொழிபெயர்ப்பாளர்: ரா. கிருஷ்ணையா

பதிப்பாளர் குறிப்பு

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியைச் சேர்ந்த மார்க்சிய-லெனினியக் கழகம் வெளியிட்ட வி. இ. லெனின், நூல் திரட்டின் ஐந்தாம் பதிப்பு, தொகுதி 39லிருந்து இந்த மொழிபெயர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது.

தோழர்களே, கிழக்கு மக்களது முஸ்லிம் நிறுவனங்களின் பிரதிநிதிகளாகிய கம்யூனிஸ்டுத் தோழர்களது இந்தக் காங்கிரசிற்கு வாழ்த்துரைக்கவும், தற்போது ருஷ்யாவிலும் உலகெங்கணும் இருந்துவரும் சூழ்நிலை பற்றி சில வார்த்தைகள் கூறவும் கிடைத்திருக்கும் இந்த வாய்ப்பு குறித்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நடப்பு விவகாரங்களே எனது உரையின் கருப்பொருள். கீழ்த்திசை மக்களுக்கு ஏகாதிபத்தியத்தின் பாலுள்ள போக்கும் இம்மக்களிடையே நடைபெறும் புரட்சிகர இயக்கமும்தான் இப்பிரச்சினையின் அத்தியாவசியக் கூறுகளாய் எனக்குத் தோன்றுகின்றன. சர்வதேச ஏகாதிபத்தியத்துக்கு எதிராய் நமது சோவியத் குடியரசு நடத்தும் புரட்சிகரப் போராட்டத்துடன் நேரடித் தொடர்பு கொண்டு தான் கீழ்த்திசை மக்களின் புரட்சிகர இயக்கம் இப்பொழுது பயனுள்ள முறையில் வளர முடியும், வெற்றிகர முடிவை எய்த முடியும் என்பது வெள்ளிடை மலை. பல சூழ்நிலைகளின் காரணமாகவும், ருஷ்யாவின் பிற்பட்ட நிலையும் அதன் மிகப்பெரும் பரப்பும் அடங்கிய பல சூழ்நிலைகளின் காரணமாகவும், ருஷ்யாவானது ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்கும் இடைப்பட்ட, மேற்குலகுக்கும் கிழக்குலகுக்கும் இடைப்பட்ட ஓர் எல்லையாய் இருத்தலாலும், ஏகாதிபத்தியத்துக்கு எதிரான உலகப் போராட்டத்தின் முன்னோடிகளாய்ச் செயல்படும் முழு உக்கிரத்தையும் நாம் ஏற்றுச் சகித்துக் கொள்ள வேண்டியதாயிற்று—இதை நாம் ஒரு பெரும் சிறப்பாகவே கருதுகிறோம். ஆகவே, உடனடியான வருங்காலத்தின் வளர்ச்சிப் போக்கு அனைத்தும் சர்வதேச ஏகாதிபத்தியத்துக்கு எதிரான மேலும் விரிவான, மேலும் கடுமையான போராட்டத்தையே எதிர்நோக்குகிறது. இந்தப் போராட்டம் ஜெர்மனி,

பிரான்ஸ், பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடு ஆகியவற்றின் ஒன்றுபட்ட ஏகாதிபத்தியத்தின் சக்திகளை எதிர்த்து சோவியத் குடியரசு நடத்திவரும் போராட்டத்துடன் தவிர்க்க முடியாதபடி இணைந்ததாகவே இருக்கும்.

இராணுவ அம்சத்தைப் பொறுத்தவரை எல்லாப் போர் முனைகளிலும் நமது நிலைமை எவ்வளவு சாதகமாய் இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரிந்ததே. இப்பிரச்சினை குறித்து நான் விவரமாய்க் கூற வேண்டியதில்லை. சர்வதேச ஏகாதிபத்தியத்தால் நம்மீது திணிக்கப்பட்ட இந்த உள்நாட்டு யுத்தம் இரண்டு ஆண்டுகளில் ருஷ்ய சோஷலிசக் கூட்டாட்சி சோவியத் குடியரசுக்குச் சொல்லொணுத இன்னல் இழைத்திருக்கிறது; விவசாயிகளாலும் தொழிலாளர்களாலும் சகிக்கவே முடியாதென அடிக்கடித் தோன்றும்படியான பொறுக்க முடியாத சுமையை அவர்கள்மீது இருத்திற்று என்பதை மட்டும் இங்கு கூறுகிறேன். அதேபோதில் இந்த யுத்தம் அதன் மிருகத்தனமான வன்முறை காரணமாகவும், நமது நேசக் கூட்டாளிகள் எனப்படுவோர், சோஷலிசப் புரட்சிக்கு முன்பேகூட நம்மைச் சூறையாடி வந்த இவர்கள், இப்பொழுது மூர்க்கமான காட்டு விலங்குகளாய் மாறி ஈவிரக்கமின்றி நடத்திவரும் கொடுந்தாக்குதல் காரணமாகவும், ஒரு பெரிய விந்தை புரிந்துள்ளது; போர்களால் களைத்துப்போய் ஓய்ந்துவிட்ட மக்களை, மற்ருெரு யுத்தத்தைத் தாக்குப்பிடிக்க சக்தியற்ருேராய்த் தோன்றிய இவர்களை, இரண்டு ஆண்டுகளாய் யுத்தத்தைத் தாக்குப்பிடித்ததோடல்லாமல் அதனை வெற்றிகர முடிவுக்குக் கொண்டு வருவோருமான வீரர்களாய் மாற்றியிருக்கிறது. கொல்ச்சாக்,[2] யுதேனிச்,[3] தெனீக்கின்[4] இவர்கள்மீது இப்பொழுது நாம் பெற்றுவரும் வெற்றிகள், தமது விடுதலைக்காகப் போராடக் கிளர்ந்தெழுந்துவிட்ட நாடுகள், மக்களை எதிர்த்து உலக ஏகாதிபத்தியம் நடத்தும் போராட்டத்தின் வரலாற்றில் ஒரு புதிய கட்டம் துவங்கியிருப்பதைக் குறிக்கின்றன. இத்துறையில், நமது உள்நாட்டு யுத்தத்தின் இந்த இரண்டு ஆண்டுகளும் நெடுங்காலமாய் வரலாற்றுக்கு தெரிந்த ஓர் உண்மையை முற்றிலும் உறுதி செய்திருக்கின்றன—யுத்தத்தின் தன்மையும் அதன் வெற்றியும் யுத்தத்துக்குச் செல்லும் நாட்டினுள் இருக்கும் அமைப்

பையே பிரதானமாய்ப் பொறுத்துள்ளன, யுத்தமானது குறிப்பிட்ட அந்த நாடு யுத்தத்துக்கு முன்பு அனுசரித்த உள் நாட்டுக் கொள்கையின் பிரதிபலிப்பே ஆகும் என்கிற இவ் வுண்மையை உறுதி செய்துள்ளன. யுத்தத்தை நடத்திச் செல் வதில் இவை யாவும் தவிர்க்க முடியாத வகையில் பிரதிபலிக் கின்றன.

எந்த வர்க்கம் யுத்தத்தை நடத்திற்று, தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறது என்பது மிகவும் முக்கியமான பிரச்சினை. நமது உள்நாட்டு யுத்தம் தம்மை விடுவித்துக் கொண்டுவிட்ட தொழிலாளர்களாலும் விவசாயிகளாலும் நடத்தப்படுகிறது என்ற காரணத்தாலும், உழைப்பாளி மக்கள் தமது சொந்த நாட்டையும் அனைத்து உலகையும் சேர்ந்த முதலாளிகளிடமிருந்து விடுதலை பெறுவதற்காக நடத்தும் அரசியல் போராட்டத்தின் தொடர்ச்சியே இந்த உள்நாட்டு யுத்தம் என்ற காரணத்தாலும் மட்டும்தான்—இக்காரணங்களால் மட்டுமேதான்—ருஷ்யாவைப் போன்ற ஒரு பிற்பட்ட நாட்டில், நான்கு ஆண்டுக் கால ஏகாதிபத்திய யுத்தத்தால் ஓய்ந்து ஒடுங்கிய ஒரு நாட்டில், நம்புதற்கரிய, ஈடிணையற்ற துன்பத்துக்கும் இன்னலுக்குமுரிய இரண்டு ஆண்டுகளாய் அந்த உள்நாட்டு யுத்தத்தை நடத்திச் செல் வதற்கு வேண்டிய வைராக்கியச் சித்தம் படைத்த மக்களைக் காண முடிகிறது.

உள்நாட்டு யுத்தத்தின் வரலாற்றில் கொல்ச்சாக்கின் விவகாரம் இதற்குத் தெளிவான எடுத்துக்காட்டு. கொல்ச் சாக் உலகின் மிகுந்த பலம் படைத்த எல்லா அரசுகளின் உதவியையும் பெற்ற பகைவன். உதாரணமாய் ஏகாதிபத் திய யுத்தத்துக்காகப் பயிற்சி செய்யப்பட்டு ஆனல் அனேக மாய் அதில் பங்கு கொள்ளாமலும் ஆகவே சேதமுறாமலும் இருந்த ஜப்பானியத் துருப்புக்களைப் போன்ற உலக ஏகாதி பத்தியவாதிகளது மிகச் சிறந்த துருப்புக்களும் அடங்கலாய்ச் சுமார் ஒரு லட்சம் அந்நியத் துருப்புக்களால் பாதுகாக்கப் பெற்ற ஒரு ரயில்பாதையும் கொல்ச்சாக் வசமிருந்தது. சைபீரிய விவசாயிகளுடைய பக்கபலம் கொல்ச்சாக்கிற்குக் கிடைத்திருந்தது. சைபீரிய விவசாயிகள் பண்ணையடிமை முறையை அறியாதவர்கள், மிகவும் சுபிட்ச நிலையில் இருந்

தவர்கள், ஆகவே கம்யூனிசத்திலிருந்து ஏனைய யாரையும் விட நெடுந் தொலைவு விலகி நின்றவர்கள். கொல்ச்சாக் வெல்லற்கரிய சக்தியாகவே தோன்றினார், ஏனெனில் அவருடைய துருப்புக்கள் சர்வதேச ஏகாதிபத்தியத்தின் முன்னிலைப் படைகளாய் இருந்தவை. இது நாள் வரையில் ஜப்பானிய, செக்கோஸ்லோவாக்கியத் துருப்புக்களும் ஏனைய பல ஏகாதிபத்திய தேசங்களின் துருப்புக்களும் சைபீரியாவில் செயல்பட்டு வருகின்றன. இருந்தபோதிலும் சைபீரியாமீதும் அதன் அளவுகடந்த இயற்கைச் செல்வாதாரங்கள்மீதும் கொல்ச்சாக் நடத்தி வரும் ஆட்சியின் ஓராண்டுக்கும் அதிகமான அனுபவம்—ஆரம்பத்தில் இரண்டாவது அகிலத்தின்[5] சோஷலிஸ்டுக் கட்சிகளாலும் அரசியல் நிர்ணய சபைக் கமிட்டியின்[6] அணியை நிறுவிக் கொண்ட மென்ஷிவிக்குகளாலும்[7] சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினராலும்[8] ஆதரிக்கப்பட்டு, ஆகவே இந்நிலைமைகளில் சாமான்ய ஆளின் கண்ணோட்டத்திலும் வரலாற்றின் சாதாரணப் போக்கின் கண்ணோட்டத்திலும் உறுதியானதாகவும் வெல்ல முடியாததாகவும் தோன்றிய இந்த ஆட்சியின் ஓராண்டுக்கும் அதிகமான அனுபவம் பின்வருவதை உண்மையில் கண்கூடாய்ப் புலப்படுத்திற்று: கொல்ச்சாக் ருஷ்யாவின் மையப் பகுதிக்குள் முன்னேறி வர வர அவர் மேலும் மேலும் தேய்ந்து குறுகவே நேர்ந்தது; முடிவில் கொல்ச்சாக்கின்மீது சோவியத் ருஷ்யா முழுநிறை வெற்றிவாகை சூடியதைக் கண்ணுற்றுள்ளோம். முதலாளித்துவ ஒடுக்குமுறையிலிருந்து விடுதலை பெற்ற தொழிலாளர்கள், விவசாயிகளுடைய ஒன்றுபட்ட சக்திகள் மெய்யான விந்தைகள் புரிய வல்லவை என்பதற்குச் சந்தேகத்துக்கு இடமில்லாத நடைமுறை நிரூபணம் இங்கு நமக்குக் கிடைக்கிறது. புரட்சிகர யுத்தம் ஒன்று ஒடுக்கப்பட்ட உழைப்பாளி மக்களை மெய்யாகவே கவர்ந்திழுத்து அவர்களது நாட்டத்துக்கு உரியதாகும்போது, சுரண்டுவோரைத் தாம் எதிர்த்துப் போராடுகிறோம் என்று அவர்களை உணர்வு பெறச் செய்யும்போது—இத்தகைய புரட்சிகர யுத்தம் விந்தைகள் புரிவதற்கான பலத்தையும் வல்லமையையும் ஊற்றெடுக்கச் செய்கிறது என்பதற்கு நடைமுறை நிரூபணம் இங்கு நமக்குக் கிடைக்கிறது.

செஞ்சேனை கண்டிருக்கும் இச்சாதனையும், அதன் போராட்டமும் அதன் வெற்றியின் வரலாறும் கீழ்த்திசை மக்கள் அனைவருக்கும் பிரம்மாண்டமான, சகாப்தகரமான முக்கியத்துவமுடையனவாய் இருக்குமென நினைக்கிறேன். கீழ்த்திசை மக்கள் பலமில்லாதோராய் இருக்கலாம், தொழில் நுட்பத்தின், இராணுவக் கலையின் எல்லா அதிசயங்களையும் கையாண்டு போராடும் ஐரோப்பிய ஒடுக்குமுறையாளர்கள் வெல்லற்கரிய பலமுடையோராய்த் தோன்றலாம் — இருப்பினும் ஒடுக்கப்பட்ட மக்கள் நடத்தும் புரட்சிகர யுத்தம் உழைப்பாளர்களும் ஒடுக்கப்பட்டோருமான மக்களில் லட்சோப லட்சக்கணக்கானோரைத் தட்டியெழுப்புவதில் மெய்யாகவே வெற்றி பெறுமாயின், கீழ்த்திசை மக்களுடைய விடுதலை இப்பொழுது முற்றிலும் நடைமுறை சாத்தியமானதாகி விடும்படி இந்த யுத்தம் அவ்வளவு உள்ளாற்றல்களும் விந்தைகளும் நிறைந்ததாகும் என்பதை அவர்களுக்கு தெளிவு படுத்தும். சர்வதேசப் புரட்சிக்குரிய வாய்ப்புக்களின் கண்ணோட்டத்திலிருந்து மட்டுமின்றி, ஆசியாவில், சைபீரியாவில் கிடைத்திருக்கும் நேரடி இராணுவ அனுபவத்தின், பலம் படைத்த எல்லா ஏகாதிபத்திய நாடுகளின் ஆயுதப் படையெடுப்புக்கு உள்ளாகியுள்ள சோவியத் குடியரசின் அனுபவத்தின் கண்ணோட்டத்திலிருந்தும் கீழ்த்திசை மக்களின் விடுதலை இப்பொழுது முற்றிலும் நடைமுறை சாத்தியமானதாகிவிட்டது.

தவிரவும் ருஷ்யாவில் உள்நாட்டு யுத்தத்தின் அனுபவமானது, உள்நாட்டு யுத்தத் தீயிலே புரட்சிகர ஆர்வத்தின் வளர்ச்சியுடன் கூடவே சக்திமிக்க உள் ஒருமைப்பாடும் ஏற்படுகிறது என்பதை நமக்கும் எல்லா நாடுகளின் கம்யூனிஸ்டுகளுக்கும் தெளிவுபடுத்தியிருக்கிறது. யுத்தமானது ஒரு தேசத்தின் பொருளாதார, நிறுவன ஒழுங்கமைப்பு சக்திகள் அனைத்தையும் சோதித்துப் பார்க்கிறது. முடிவாய்ப் பார்க்குமிடத்து, பஞ்சத்திலும் குளிரிலும் துயருறும் தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் இந்த யுத்தம் அளவு மீறிக் கடுமையானதாய் இருந்துள்ளதென்றாலும், நாம் வெற்றி பெற்று வருகிறோம், தொடர்ந்து வெற்றி பெறுவோம் என்று இந்த இரு ஆண்டு அனுபவத்தின் அடிப்படையில் கூறலாம். ஏனெனில்

நாட்டின் உள்மண்டலம், பலம் பொருந்திய ஒன்று, நம்மிடம் இருக்கிறது; பஞ்சத்தையும் குளிரையும் மீறி விவசாயிகளும் தொழிலாளர்களும் ஒன்றுசேர்ந்து நிற்கின்றனர், வலுமிக் கோராய் வளர்ந்துள்ளனர், பலத்த ஒவ்வொரு அடியையும் அடுத்துத் தமது சக்திகளை மேலும் கெட்டியாய் ஒன் றிணைத்துக்கொண்டும் மேலும் கூடுதாலான பொருளாதார வலிமை பெற்றும் பதிலளிக்கின்றனர். இது ஒன்றினால் மட்டுமே கொல்ச்சாக் மீதும் யுதேனிச்மீதும் இவர்களுடைய கூட்டாளி களான உலகின் வலுமிக்க அரசுகள் மீதுமான வெற்றிகள் சாத்தியமாகியுள்ளன. ஒரு புறத்தில் புரட்சிகர யுத்தத்தை வளர்த்துக் கொள்ள முடியுமென்பதையும், மறு புறத்தில் அந்நியப் படையெடுப்பின் பலத்த அடிகளை அடுத்து சோவி யத் அதிகாரம் வளர்ந்து வலுவடைந்து செல்கிறதென்பதை யும் கடந்த இரு ஆண்டுகளும் காட்டியுள்ளன. புரட்சியின் மையத்தை, சர்வதேச ஏகாதிபத்தியத்தின்மீது யுத்தப் பிரகடனம் செய்யத் துணிந்த தொழிலாளர்கள், விவசாயி களது குடியரசை விரைவில் அழித்திடுவதே இந்த அந்நியப் படையெடுப்பின் பலத்த அடிகளின் நோக்கமாகும். ஆனால் ருஷ்யாவின் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் அழித் திடுவதற்குப் பதில் இந்த பலத்த அடிகள் அவர்களை மேலும் உறுதி பெறவே செய்தன.

இதுவே தற்போதைய கால கட்டத்தின் பிரதான பலன் கள், பிரதான உள்ளடக்கம். நமது மண்ணில் எஞ்சியிருக்கும் கடைசிப் பகைவனான தெனீக்கின் மீது தீர்மானகரமான வெற்றிகள் பெறும் தறுவாயில் இருக்கிறோம். நாங்கள் வலு வுடையவர்கள் என்ற உணர்வு கொண்டுள்ளோம். எங்கள் குடியரசு உள்ளார்ந்த உறுதியடைந்திருக்கிறது, தெனீக்கி னுக்கு எதிரான யுத்தத்திலிருந்து மேலும் அதிக வலுப் பெற்று, சோஷலிசக் கட்டமைப்பை எழுப்பும் பணிக்கு மேலும் சிறப்பான ஆயத்த நிலையில் வெளிவருவோமெனக் கூறுவது தவறல்ல என்று ஓராயிரம் தரம் திரும்பத் திரும்ப நாம் பறைசாற்றலாம். சோஷலிசக் கட்டமைப்பை எழுப்பு வதற்கு உள்நாட்டு யுத்தத்தின்போது நாங்கள் மிகச் சொற்ப நேரமும் ஆற்றலும்தான் செலவிட முடிந்தது. ஆனால் இப் பொழுது நாங்கள் தங்குதடையற்ற சுதந்திரப் பாதையில்

அடியெடுத்து வைக்கிறபடியால் சந்தேகத்துக்கு இடமின்றி இதற்கு எங்களை முழுமையாய்ப் பணித்துக் கொள்வோம்.

மேற்கு ஐரோப்பாவில் ஏகாதிபத்தியம் அழுகிக் கொண்டிருப்பதை காண்கிறோம். ஓராண்டுக்கு முன்பு ஜெர்மன் சோஷலிஸ்டுகளுக்குங்கூட, மற்றும் மிகப் பெரும்பாலான சோஷலிஸ்டுகளுக்கும் — நிலவரங்களை இவர்கள் புரிந்து கொள்ளவில்லை — நடைபெற்று வந்தது இரு உலக ஏகாதிபத்தியக் கோஷ்டிகளுக்கு இடையிலான போராட்டம் மட்டுமேதான் என்பதாய்த் தோன்றிற்று; இந்தப் போராட்டமே முழு வரலாறும், வேறு எதையும் உண்டாக்க வல்ல சக்தி எதுவுமே இல்லை என்பதாய் அவர்கள் நம்பினர். பலம் படைத்த இந்த உலகக் கொள்ளைக்காரர்களின் கோஷ்டிகளில் ஒன்றின் பக்கம் சேர்வதைத் தவிர்த்து சோஷலிஸ்டுகளுக்குங்கூட மாற்று வழி எதுவுமில்லை என்பதாய் அவர்களுக்குத் தோன்றியது. 1918 அக்டோபர் இறுதியில் அப்படித்தான் அவர்களுக்குத் தோன்றியது. ஆனால் அதற்குப் பிற்பாடு கழிந்திருக்கும் ஓராண்டில் உலக வரலாறு முன்பின் அறியாத நிகழ்ச்சிகளைக் கண்டுள்ளதைப் பார்க்கிறோம். பெரிய விளைவுகளை உண்டாக்கும் ஆழமான நிகழ்ச்சிகள் இவை. பல சோஷலிஸ்டுகளின் கண்களை இவை திறந்திருக்கின்றன. ஏகாதிபத்திய யுத்தத்தின்போது இவர்களில் பலர் தேசபக்தர்களாய் இருந்தனர், பகைவன் ஒருவனை தாம் எதிர்நோக்குவதாய்க் கூறித் தமது நடத்தைக்கு நியாயம் கற்பித்துக் கொண்டனர். ஜெர்மன் ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை பெற பிரிட்டிஷ், பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் வழி செய்வதாய்க் காரணம் கூறி இவர்களுடன் தாம் கொண்ட கூட்டுக்கு நியாயம் கற்பித்துக் கொண்டனர். அந்த யுத்தத்தால் எத்தனை பிரமைகள் தகர்க்கப்பட்டன பாருங்கள்! ஜெர்மன் ஏகாதிபத்தியம் அழுகிக் கொண்டிருப்பதைக் கண்ணுறுகிறோம். இந்த அழுகல் குடியரசுவாதப் புரட்சிக்கு மட்டுமின்றி, சோஷலிசப் புரட்சிக்குங்கூட இட்டுச் சென்றுள்ளது. ஜெர்மனியில் இன்று வர்க்கப் போராட்டம் மேலும் கடுமையாகியிருப்பதும், உள்நாட்டு யுத்தம்—குடியரசுவாதக் கொடியை ஏற்றுக் கொண்டு, ஆனால் தொடர்ந்து ஏகாதிபத்தியவாதிகளாகவே இருந்து வரும் ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிரான ஜெர்மன் பாட்டாளி வர்க்கத்தின் யுத்தம்

—மேலும் மேலும் நெருங்கி வருவதும் உங்களுக்குத் தெரிந் தவையே.

மேற்கு ஐரோப்பாவில் சமுதாயப் புரட்சி அதிவேகமாய் முற்றி வருகிறது; அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் இதுவே தான் நடைபெற்று வருகிறது. அமெரிக்காவும் பிரிட்டனும் கலாசாரத்தின், நாகரிகத்தின் பிரதிநிதிகளாய் வேடம் பூண் டுள்ள நாடுகள்; ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகளான ஹூனர் கள்மீது வெற்றி பெற்றவை. ஆயினும் வெர்சேய் உடன் படிக்கை[9] முடிவானதும், ஜெர்மன் கொள்ளைக்காரர்கள் நம் மீது திணித்த பிரேஸ்த் உடன்படிக்கையைக்[10] காட்டிலும் நூறு மடங்கு அது கொள்ளைக்காரத்தனமாய் இருந்ததையும், வெற்றி பெற்ற துர்பாக்கிய நாடுகளின் முதலாளிகளும் ஏகா திபத்தியவாதிகளும் தமக்குத் தாமே கொடுத்துக் கொள்ளக் கூடிய மிகக் கடுமையான உதையாய் அது அமைந்ததையும் எல்லோரும் கண்ணுற்றனர். வெர்சேய் உடன்படிக்கை வெற்றி பெற்ற தேசங்களது மக்களின் கண்களைத் திறந்துவிட்டது; பிரிட்டனையும் பிரான்சையும் பொறுத்தவரை இந்நாடுகள் ஜனநாயக அரசுகளே என்ற போதிலும் நாம் எதிர்நோக்கு வது ஏகாதிபத்தியக் கொள்ளைக்காரர்கள் ஆட்சி புரியும் நாடுகளையே அன்றி கலாசாரம், நாகரிகம் இவற்றின் பிரதி நிதிகளையல்ல என்பதை தெளிவுபடுத்திற்று. இந்தக் கொள் ளைக்காரர்களிடையிலான உள் போராட்டம் அதிவேகமாய் வளர்ந்து வருகிறது. வெர்சேய் உடன்படிக்கையானது ஆனந் தப்பட்டுக் கொள்ளும் ஏகாதிபத்தியவாதிகளுக்குப் பகட்டு வெற்றியையே ஆகுமென்பதையும், உண்மையில் ஏகாதிபத் திய உலகு அனைத்தின் கையாலாகாத்தனத்தையும் யுத்தத் தின்போது தம்மை அழுகிச் செல்லும் ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதிகளுடன் இணைத்துக் கொண்டு ஒன்றோடொன்று போராடிய கொள்ளைக்காரக் கோஷ்டிகளில் ஒன்றைப் பாது காத்து நின்ற சோஷலிஸ்டுகளைத் தொழிலாளி மக்கள் தீர் மானமாய் விட்டொழித்துவிட்டனர் என்பதையும் அறிந்து நாம் மனம் மகிழும் வண்ணம் அந்த உள் போராட்டம் அவ் வளவு வேகமாய் வளர்ந்து செல்கிறது. வெர்சேய் உடன் படிக்கை தீவட்டிக் கொள்ளையைக் குறிக்கும் சமாதானமாய் இருப்பதாலும், உண்மையில் பிரிட்டனும் பிரான்சும் காலனி

கள்மீது தமது ஆட்சியைப் பலப்படுத்திக் கொள்ளவும் தமது ஏகாதிபத்திய வலிமையைப் பெருக்கிக் கொள்ளவும் தான் ஜெர்மனியை எதிர்த்துப் போராடின என்பதை இவ் வுடன்படிக்கை தெளிவுபடுத்துவதாலும் தொழிலாளி மக் களுடைய கண்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. அந்த உள் போராட்டம் காலத்துக்குக் காலம் விரிவடைந்து வளர்கிறது. நவம்பர் 21ஆம் தேதியிட்டு லண்டனிலிருந்து அனுப்பப் பட்ட வானொலிச் செய்தி ஒன்றை இன்று பார்த்தேன். அமெ ரிக்கப் பத்திரிகையாளர்கள்—புரட்சியாளர்களிடம் அனுதா பம் கொண்டவர்களாய்ச் சந்தேகிக்க முடியாதவர்கள்— வெர்சேய் உடன்படிக்கையை அங்கீகரிக்க அமெரிக்கர்கள் மறுப்பதால் பிரான்சில் அமெரிக்கர்கள்மீது என்றுமே கண் டிராத வெறுப்பு கிளர்ந்துள்ளதாய் இச்செய்தியில் கூறுகின் றனர்.

பிரிட்டனும் பிரான்சும் வெற்றிவாகை சூடியவை, ஆனல் கழுத்தளவுக்கு அவை அமெரிக்காவுக்குக் கடன்பட்டுள்ளவை. பிரிட்டனும் பிரான்சும் தாம்தான் வெற்றியாளர்கள் என்று எவ்வளவு வேண்டுமானுலும் நினைத்துக் கொள்ளட்டும், ஆனல் வெண்ணெயைக் கடைந்து எடுத்துக் கொள்ளப்போ வது தானேதான் என்றும், யுத்தத்தின்போது தான் அளித்த உதவிக்காகக் கடுவட்டி வசூலித்துக் கொள்வதென்றும் அமெ ரிக்கா தீர்மானம் செய்திருக்கிறது. அமெரிக்கக் கடற்படை இதற்குரிய உத்தரவாதமாய் அமையப் போகிறது. இந்த அமெரிக்கக் கடற்படை இப்பொழுது கட்டப்பெற்று வரு கிறது, அளவில் பிரிட்டிஷ் கடற்படையை எட்டிப் பிடித்து மிஞ்சி வருகிறது. அமெரிக்க ஏஜண்டுகள் வெள்ளையர்களை, பெண்களையும் சிறுமிகளையும், விலைக்கு வாங்கி விபசாரம் வளர்த்திட அமெரிக்காவுக்குக் கப்பல்களில் அனுப்பி வைப் பதில் அமெரிக்கர்களது கொள்ளைக்கார ஏகாதிபத்தியத்தின் அப்பட்டமான உருவைக் காணலாம். சுதந்திர அமெரிக்கா, நாகரிக நயம் படைத்த அமெரிக்கா, வெள்ளை அடிமைகளை வாங்கி விபசார விடுதிகளுக்கு வழங்குவதைப் பாருங்கள்! அமெரிக்க ஏஜண்டுகளுடன் போலந்திலும் பெல்ஜியத்திலும் சச்சரவுகள் ஏற்பட்டு வருகின்றன. ஆன்டான்ட்டிடமிருந்து[11] உதவி பெற்ற ஒவ்வொரு சிறு நாட்டிலும் மிகப் பெரிய அள

வில் நடைபெற்று வருவதற்கு ஒரு சின்னஞ்சிறு எடுத்துக் காட்டே இது. உதாரணமாய்ப் போலந்தை எடுத்துக் கொள்ளுங்கள். அமெரிக்க ஏஜண்டுகளும் கொள்ளை லாபக்காரர்களும் அங்கே சென்று, இப்பொழுது தான் சுயேச்சை அரசென்று பெருமையடித்துக் கொள்ளும் போலந்தின் செல்வங்களை எல்லாம் வாங்கி மூட்டை கட்டுவதைக் காண்பீர்கள். போலந்து அமெரிக்க ஏஜண்டுகளால் விலைக்கு வாங்கப்படுகிறது. அமெரிக்கர்களுடைய ஜோபுக்குள் அடைபடாத ஆலையோ தொழிற் பிரிவோ அங்கே ஒன்றுகூட இல்லை. அந்த ''மாபெரும் சுதந்திர வெற்றி நாடான'' பிரான்சையும் அடிமை செய்ய முற்படும் அளவுக்கு அமெரிக்கர்கள் ஆணவங் கொண்டவர்களாகிவிட்டனர். முன்பு லேவாதேவிக்காரர்களது நாடாயிருந்த பிரான்ஸ் இப்பொழுது அமெரிக்காவுக்கு மிகக் கடுமையாய் கடன்பட்டதாகிவிட்டது. ஏனெனில் அது தனது பொருளாதார பலத்தை இழந்து விட்டது; சொந்தத்தில் போதுமான அளவு தானியமோ நிலக்கரியோ அதனிடம் இல்லை; பெரிய அளவில் அதனுல் தனது பொருளாயதச் செல்வாதாரங்களை வளர்த்துக் கொள்ள இயலவில்லை. ஆனுல் அமெரிக்கா தங்குதடையின்றி முழு அளவில் தனக்குக் கப்பம் கட்டிவர வேண்டுமென்று வற்புறுத்துகிறது. இவ்விதம் பிரான்சும் பிரிட்டனும் சக்தி வாய்ந்த பிற நாடுகளும் பொருளாதார வழியில் போண்டியாகியிருப்பது மேலும் மேலும் பட்டவர்த்தனமாகிவருகிறது. பிரெஞ்சுத் தேர்தல்களில் பாதிரிமார் கட்சியினர் மேல்நிலை பெற்றுவிட்டனர். ஜெர்மனியை எதிர்த்து சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் பாதுகாப்பதாய்க் கூறப்பட்ட ஒன்றில் தமது பலம் அனைத்தையும் ஈடுபடுத்தும்படி ஏமாற்றப்பட்ட பிரெஞ்சு மக்களுக்கு முடிவில்லாக் கடனும், கொள்ளைவெறி கொண்ட அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளது ஏளனமும், இவை யாவற்றுக்கும் மேலாய் மிகவும் காட்டுத்தனமான பிற்போக்கின் பிரதிநிதிகளாலான பாதிரிமார் கட்சியினரது பெரும்பான்மையும் இப்பொழுது வெகுமதியாய்க் கிடைத்திருக்கின்றன.

உலகெங்குமே சூழ்நிலை சொல்ல முடியாத அளவுக்கு அதிகச் சிக்கலாகிவிட்டது. கொல்ச்சாக்மீதும், யுதேனிச்மீதும்—சர்வதேச மூலதனத்தின் அந்த அடிவருடிகள்மீது—நாங்கள்

பெற்றிருக்கும் வெற்றி மிகப் பெரிது. ஆனால் இதைப் போல அவ்வளவு வெளிப்படையாய்த் தெரியாவிட்டாலுங்கூட, சர்வ தேச அளவில் நாங்கள் கண்டுவரும் வெற்றி இதனிலும் மிகப் பெரிது. ஏகாதிபத்தியத்தின் உள் அழுகலில் அந்த வெற்றி அடங்கியிருக்கிறது. ஏகாதிபத்தியத்தால் எங்களுக்கு எதிராய்த் தன் துருப்புக்களை அனுப்ப முடியவில்லை. ஆன்டான்ட் முயன்று பார்த்தது, ஆனால் பயனில்லை. ஏனெனில் அதன் துருப்புக்களுக்கு எங்கள் துருப்புக்களுடன் தொடர்பு ஏற்பட்டு அவற்றின் மொழிகளில் பெயர்க்கப்பட்ட எங்கள் ருஷ்யவின் சோவியத் அரசியல் சட்டத்தைப்[12] பற்றித் தெரிய வந்ததும் அவை சோர்வுற்றுத் தளர்ந்து விடுகின்றன. அழுகல் சோஷலிசத்தின் தலைவர்களுடைய செல்வாக்கையும் மீறி எங்கள் அரசியல் சட்டம் தொழிலாளி மக்களுடையஅனுதாபத்தை எப்பொழுதும் பெற்றுக் கொண்டுவிடுகிறது. ‘‘சோவியத்’’ என்னும் சொல் இப்பொழுது எல்லோரும் அறிந்த சொல்லாகிவிட்டது. சோவியத் அரசியல் சட்டம் எல்லா மொழிகளிலும் பெயர்க்கப்பட்டு ஒவ்வொரு தொழிலாளிக்கும் தெரிந்ததாகிவிட்டது. அது தொழிலாளி மக்களின் அரசியல் சட்டம், சர்வதேச மூலதனத்தின்மீது வெற்றி பெற அறைகூவல் விடுத்திருக்கும் தொழிலாளி மக்களது அரசியலமைப்பு என்பதும், அது சர்வதேச ஏகாதிபத்தியவாதிகள்மீது நாங்கள் சாதித்திருக்கும் ஒரு வெற்றி என்பதும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் தெரிந்ததே. எமது இந்த வெற்றி எல்லா ஏகாதிபத்திய நாடுகளிலும் எதிரொலிக்கிறது. ஏனென்றால் அவற்றின் சொந்தத் துருப்புக்களே அவற்றுக்குக் கிடைக்காதபடிச் செய்துள்ளோம், இத்துருப்புக்களை எங்கள் தரப்புக்கு வென்று கொண்டுவிட்டோம், சோவியத் ருஷ்யாவுக்கு எதிராய் அந்தத் துருப்புக்களை உபயோகிக்கும் சாத்தியப்பாடு அவற்றுக்குக் கிடைக்காதவாறு செய்துவிட்டோம்.

பிற நாடுகளின் — பின்லாந்து, போலந்து, லாத்வியா இவற்றின்—துருப்புக்களைக் கொண்டு யுத்தம் புரிய அவை முயற்சி செய்தன; ஆனால் பயன் ஏதும் இல்லை. பிரிட்டிஷ் அமைச்சர் சர்ச்சில் சில வாரங்களுக்கு முன்பு காமன்ஸ் சபையில் பேசுகையில் சோவியத் ருஷ்யாவுக்கு எதிராய்ப் பதி

ஞன்கு தேசங்களது படையெடுப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டு விட்டது, இதன் பயனுய்ப் புத்தாண்டுக்குள் ருஷ்யாமீது வெற்றி கிட்டிவிடும் என்று ஐம்பமடித்துக் கொண்டார்—அனைத்து உலகுக்கும்இது தந்திமூலம் பறைசாற்றப்பட்டது. பல தேசங்கள் அதில் பங்கு கொண்டது மெய்தான்—பின்லாந்து உக்ரைன், போலந்து, ஜியார்ஜியா, மற்றும் செக்கோஸ்லோவாக்கியர்கள், ஜப்பானியர்கள், பிரெஞ்சுக்காரர்கள், பிரிட்டிஷார், ஜெர்மானியர்கள் ஆகியோரும் பங்கு கொண்டது மெய்தான். ஆனுல் அதன் முடிவு என்னவென்பது நமக்குத் தெரியும்! எஸ்தோனியர்கள் யுதேனிச்சின் படைகளை நட்டாற்றில் விட்டுச் சென்றது நமக்குத் தெரியும். இப்பொழுது பத்திரிகைகளில் ஆக்ரோஷமான சர்ச்சை நடைபெற்று வருகிறது, ஏனென்ருல் எஸ்தோனியர்கள் யுதேனிச்சுக்கு உதவ விரும்பவில்லை. பின்லாந்தும்—அதன் முதலாளித்துவ வர்க்கத்தார் எவ்வளவுதான் விரும்பிய போதிலும்—அவருக்கு உதவி செய்யவில்லை. நம்மைத் தாக்குவதற்கான இந்த இரண்டாவது முயற்சியும் இவ்வாறு தோல்வியுற்றுவிட்டது. ஆன்டான்ட் அதன் சொந்தத் துருப்புக்களை அனுப்பியது முதற் கட்டமாகும். இந்தத் துருப்புக்கள் இராணுவ நுட்பமுறையின் எல்லா விதிகளின் பிரகாரம் படைச்சாதனங்கள் பெற்றிருந்தன; ஆகவே அவை சோவியத் குடியரசைத் தோற்கடித்து விடுமென்பதாய்த் தோன்றிற்று. அவை ஏற்கனவே காக்கசஸிலிருந்தும் அர்ஹான்கெல்ஸ்கிலிருந்தும் கிரீமியாவிலிருந்தும் வெளியேறிவிட்டன. இன்னும் அவை மூர்மன்ஸ்கில் இருந்து கொண்டிருக்கின்றன, அதே போல செக்கோஸ்லோவாக்கியர்களும்[13] சைபீரியாவில் இருந்து வருகின்றனர், ஆனுல் தனிமைப்பட்ட கோஷ்டிகளாகவே இருந்து வருகின்றனர். எங்களைத் தனது சொந்த படைகளால் தோற்கடிக்கலாமென்று ஆன்டான்ட் செய்த முதல் முயற்சி எங்களுக்கு வெற்றியாய் முடிவுற்றது. இரண்டாவது முயற்சி எங்களுடைய அண்டை அயலாரும், நிதித் துறையில் முற்றிலும் ஆன்டான்ட்டையே சார்ந்தவையுமான தேசங்களை எங்களுக்கு எதிராய் ஏவிவிடுவதிலும், சோஷலிசத்தின் உறைவிடம் என்ற முறையில் எங்களை நசுக்கும்படி அவற்றை நிர்ப்பந்தம் செய்ய முயலுவதிலும் அடங்கியிருந்தது. ஆனுல் அந்த முயற்சியும்

தோல்வியாகவே முடிவுற்றது. இந்தச் சிறிய நாடுகளில் எதற்கும் இத்தகைய ஒரு யுத்தத்தை நடத்தும் வல்லமை கிடையாது என்பது தெரியலாயிற்று. அது மட்டுமல்ல, ஆன்டான்ட் மீது ஒவ்வொரு சிறு நாட்டிலும் வெறுப்பு வேர்விட்டு வளர்ந்திருந்தது. யுதேனிச் ஏற்கனவே கிராஸ்ஞெயே செலோவைப் பிடித்துக்கொண்டுவிட்ட ஒரு நேரத்தில் பின்லாந்து பெத்ரொகிராதைப் பிடிக்க முற்படவில்லை என்ருல், சோவியத் ருஷ்யாவின் பக்கத்தில் தன்ஞல் சுயேச்சையாய் வாழ முடியும், ஆனல் தன்ஞல் ஆன்டான்ட்டுடன் சமாதானமாய் வாழ முடியாது என்பதை உணர்ந்து கொண்டு, பின்லாந்து தயங்கியதுதான் அதற்குக் காரணம். சிறு தேசங்கள் யாவுமே இதை உணர்ந்து கொண்டன. பின்லாந்து, லித்துவேனியா, எஸ்தோனியா, போலந்து இவற்றில் எல்லாம் இது உணரப்படுகிறது. இந்நாடுகளில் தேசியவெறி தலைவிரித்தாடுகிறது, ஆயினும் ஆன்டான்ட்மீது இவற்றுக்கு வெறுப்பு இருந்து வருகிறது. இந்நாடுகளில் ஆன்டான்ட் தனது சுரண்டலை விரிவாக்கிச் செல்கிறது. ஆக இப்பொழுது நிகழ்ச்சிகளின் போக்கைத் துல்லியமாய் மதிப்பீடு செய்து, சோவியத் குடியரசுக்கு எதிரான சர்வதேச யுத்தத்தின் முதற் கட்டம் மட்டுமின்றி இரண்டாவதும் தோல்வியடைந்துவிட்டதென மிகைப்பாடின்றி நாம் கூறலாம். தெனீக்கினது படைகளை முறியடிப்பதுதான் தற்போது நாங்கள் செய்ய வேண்டியதெல்லாம். ஏற்கனவே அவை பாதியளவுக்குத் தோற்கடிக்கப்பட்டுவிட்டன.

எனது உரையில் நான் சுருக்கமாய்த் தொகுத்துக் கூறியுள்ள தற்போதைய ருஷ்ய, சர்வதேசிய நிலைமை இதுவே. முடிவில் கீழ்த்திசைத் தேசிய இனங்கள் குறித்து வளர்ந்து வரும் நிலைமையைப் பற்றிச் சிலவற்றைக் கூற அனுமதியளியுங்கள். கீழ்த்திசையின் பல்வேறு மக்களின் கம்யூனிஸ்டு நிறுவனங்கள், கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பிரதிநிதிகள் நீங்கள். ருஷ்ய போல்ஷிவிக்குகள் பழைய ஏகாதிபத்தியத்தில் உடைப்பை உண்டாக்குவதிலும், புரட்சிக்குப் புதிய பாதைகளை வகுத்திடும் மிகமிகக் கடினமான, அதேபோதில் மிகமிகப் புனிதமான பணியைச் செய்திடுவதிலும் வெற்றியீட்டியிருக்கிருர்கள். ஆனல் கீழ்த்திசை உழைப்பாளி மக்களது பிரதி

நிதிகளான உங்கள் முன்னுல் இதனிலும் பெரிய, புதிய பணி ஒன்று இருக்கிறது. அனைத்துலகிலும் நடைபெறவிருக்கும் சோஷலிசப் புரட்சி ஒவ்வொரு நாட்டிலும் பாட்டாளி வர்க்கம் அதன் சொந்த நாட்டு முதலாளித்துவ வர்க்கத்தின்மீது பெறும் வெற்றியாய் இருப்பதோடு மட்டும் நின்றுவிடாது என்பது முற்றிலும் தெளிவாகி வருகிறது. புரட்சிகள் எளிதாகவும் விரைவாகவும் வருமாயின் அது சாத்தியமாயிருக்கும். ஏகாதிபத்தியவாதிகள் இதை அனுமதிக்க மாட்டார்கள், எல்லா நாடுகளும் தமது உள்நாட்டு போல்ஷிவிசத்துக்கு எதிராய் ஆயுதமேந்தி நிற்கின்றன, உள்நாட்டில் போல்ஷிவிசத்தைத் தோற்கடிக்க வேண்டுமென்பதே அவற்றின் சிந்தனையெல்லாம். எனவேதான் ஒவ்வொரு நாட்டிலும் உள்நாட்டு யுத்தம் ஒன்று மூண்டு வருகிறது. பழைய சோஷலிஸ்டு சமரசவாதிகள் இந்த யுத்தத்தில் முதலாளித்துவ வர்க்கத்தாரின் தரப்பில் அணி திரட்டப்பட்டிருக்கின்றனர். ஆகவே சோஷலிஸ்டுப் புரட்சியானது முற்றிலுமோ பிரதானமாகவோ அந்தந்த நாட்டின் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தினர் தமது முதலாளித்துவ வர்க்கத்தாரை எதிர்த்து நடத்தும் ஒரு போராட்டமாயிராது — இல்லை, ஏகாதிபத்தியத்தால் ஒடுக்கப்படும் எல்லாக் காலனிகளும், நாடுகளும், எல்லாச் சார்பு நாடுகளும் சர்வதேச ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடத்தும் ஒரு போராட்டமாய் இருக்கும். கடந்த மார்ச் மாதத்தில் நாங்கள் ஏற்ற கட்சி வேலைத்திட்டத்தில்[14] உலகச் சமூகப் புரட்சி நெருங்கிவருவது பற்றி குண நிர்ணயம் செய்கையில், முன்னேறிய எல்லா நாடுகளிலும் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் சுரண்டலாளர்களுக்கும் எதிராய் உழைப்பாளி மக்கள் நடத்தும் உள்நாட்டு யுத்தம் சர்வதேச ஏகாதிபத்தியத்துக்கு எதிரான தேசிய யுத்தங்களுடன் இணையத் தொடங்குகிறது என்று கூறினேம். புரட்சியின் போக்கு இதை ஊர்ஜிதம் செய்திருக்கிறது; காலம் செல்லச் செல்ல மேலும் மேலும் இது ஊர்ஜிதம் செய்யப்படும். கிழக்கிலும் இது இப்படியேதான் இருக்கும்.

கீழ்த்திசை மக்கள் பெருந்திரள் புது வாழ்வில் சுயேச்சையாய்ப் பங்கு கொள்வோராய், அதன் கட்டுமானிகளாய்க் கிளர்ந்தெழுவார்கள் என்பது நமக்குத் தெரியும். ஏனெனில்

கோடானு கோடியான மக்கள் சார்பு நிலையிலுள்ள முழு உரிமை பெருத தேசிய இனங்களைச் சேர்ந்தோராய் இருக்கிருர்கள். இதுகாறும் இவர்கள் ஏகாதிபத்தியத்தின் சர்வ தேசக் கொள்கையின் இலக்குகளாகவே, முதலாளித்துவக் கலாசாரத்தையும் நாகரிகத்தையும் வளப்படுத்துவதற்கான உரமாகவேஇருந்துள்ளனர். காலனிகள்மீதான தர்மகர்த்தா ஆட்சிவுரிமைக் கட்டளையை வினியோகிப்பது பற்றிப் பேசுகிருர்கள் என்ருல், சூறையாடும் உரிமையையும் கொள்ளைப் பொருளையும் பங்கிட்டுக் கொள்வதென்பதே—உலகின் பெரும்பான்மை மக்களைச் சுரண்டிக் கொழுக்கும் உரிமையை அற்ப சொற்பச் சிறுபான்மையோருக்கு அளித்திடுவதென்பதே—அதன் பொருள் என்று நமக்குத் தெரியும். இந்தப் பெரும்பான்மை மக்கள் சுயேச்சையான புரட்சிகர சக்தியாய் அமைய முடியாத காரணத்தால், அதுவரை வரலாற்று முன்னேற்றத்தின் செயல் வரம்புக்கு முற்றிலும் அப்பாற்பட்டோராய் இருந்தவர்கள். இவர்கள் இது போன்ற செயலற்ற பாத்திரம் வகிப்பது இருபதாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் முடிவடைந்துவிட்டதை நாம் அறிவோம். 1905ஐத் தொடர்ந்து துருக்கியிலும் பாரசிகத்திலும் சீனுவிலும் புரட்சிகள் நடைபேற்றன என்பதும், இந்தியாவில் புரட்சிகர இயக்கம் வளர்ச்சியடைந்தது என்பதும் நமக்குத் தெரியும். ஏகாதிபத்திய யுத்தமும் இதே போல புரட்சி இயக்கத்தின் வளர்ச்சிக்குப் பங்காற்றியது. ஏனெனில் ஐரோப்பிய ஏகாதிபத்தியவாதிகள் தமது போராட்டத்துக்கு முழுமுழுக் காலனிப் படைப் பிரிவுகளைத் திரட்டிக் கொள்ள வேண்டியிருந்தது. ஏகாதிபத்திய யுத்தம் கிழக்குலகையும் தட்டியெழுப்பி, அதன் மக்களை சர்வதேச அரசியலுக்குள் இழுத்துக் கொண்டது. பிரிட்டனும் பிரான்சும் காலனி நாடுகளின் மக்களை ஆயுதம் தரிக்கச் செய்து, அவர்களுக்கு இராணுவ நுட்பமுறைகளிலும் நவீன இயந்திரங்களிலும் பரிச்சயம் ஏற்பட உதவின. இந்த அறிவை அவர்கள் ஏகாதிபத்தியக் கனவான்களுக்கு எதிராய் உபயோகித்துக் கொள்வார்கள். தற்போதையப் புரட்சியில் கிழக்குலகு விழிப்புற்றெழுந்த காலகட்டத்தைத் தொடர்ந்து, கீழ்த்திசை மக்கள் ஏனையோர் செல்வம் திரட்டுவதற்கான இலக்குகளாய் இருந்துவிடாமல், அனைத்து உல

கின் எதிர்காலத்தையும் தீர்மானிப்பதில் பங்கெடுத்துக் கொள்ளும் காலகட்டம் வந்து கொண்டிருக்கிறது. கீழ்த்திசை மக்கள் நடைமுறைச் செயலின் அவசியத்தை, மனிதகுலம் அனைத்தின் எதிர்காலத்தையும் உருவாக்குவதில் ஒவ்வொரு தேசமும் பங்கு கொள்வதன் அவசியத்தை உணர்ந்து வருகிறார்கள்.

எனவேதான், உலகப் புரட்சியின் வளர்ச்சி வரலாற்றில்—இப்புரட்சியின் துவக்கத்தைக் கொண்டு பார்க்கையில் இது பல ஆண்டுகளுக்குத் தொடர்ந்து நடைபெறும், மிகுந்த முயற்சியைக் கோருவதாயிருக்கும் என்பது தெரிகிறது—இந்தப் புரட்சிகரப் போராட்டத்தில், புரட்சிகர இயக்கத்தில் நீங்கள் பெரிய பங்காற்ற வேண்டியிருக்கும், சர்வதேச ஏகாதிபத்தியத்துக்கு எதிரான எங்களுடைய போராட்டத்துடன் ஒன்றுகலக்க வேண்டியிருக்கும் என்று நினைக்கிறேன். சர்வதேசப் புரட்சியில் நீங்கள் பங்கெடுத்துக் கொள்வதானது, ஒரு சிக்கலான, கடினமான பணியை உங்கள் முன்னே வைக்கும். இந்தப் பணி நிறைவேற்றப்படுவதானது நம் எல்லோரது பொது வெற்றிக்குரிய அடித்தளமாய் அமையும். ஏனெனில் முதன்முதலாய் இங்கு மக்களில் பெரும்பான்மையோர் சுயேச்சையாய்ச் செயல்பட முற்படுகின்றனர், சர்வதேச ஏகாதிபத்தியத்தை வீழ்த்திடுவதற்கான போராட்டத்தில் செயல் முனைப்புள்ள கூறாய்த் திகழ்வார்கள்.

கீழ்த்திசை மக்களில் மிகப் பெருவாரியானோர் ஐரோப்பாவின் மிகவும் பிற்பட்ட நாடான ருஷ்யாவைக் காட்டிலும் மோசமான நிலையில் இருக்கிறார்கள். ஆனால் பிரபுத்துவ மீதமிச்சங்களுக்கும் முதலாளித்துவத்துக்கும் எதிரான எங்கள் போராட்டத்தில் நாங்கள் ருஷ்யாவின் விவசாயிகளையும் தொழிலாளர்களையும் ஒன்றுபடச் செய்வதில் வெற்றிபெற்றோம். மூலதனத்தையும் பிரபுத்துவத்தையும் எதிர்த்து விவசாயிகளும் தொழிலாளர்களும் ஒன்றுபட்டதால்தான் எங்களுடைய வெற்றி அவ்வளவு சுலபமாய் இருந்தது. இங்கே கிழக்குலகின் மக்களுடனான தொடர்பு குறிப்பான முக்கியத்துவமுடையது. ஏனெனில் கீழ்த்திசை மக்களின் பெரும்பான்மையோர் உழைப்பாளி மக்களது இன மாதிரியான பிரதிநிதிகளாவர்—முதலாளித்துவ ஆலைகள் மூலமான பயிற்சிக்கு

உள்ளாகிய தொழிலாளர்களல்ல அவர்கள்; மாறாக மத்திய காலத்திய ஒடுக்குமுறைக்குப் பலியான உழைப்போரும் சுரண்டப்படுவோருமான விவசாயிப் பெருங்குடி மக்களின் இன மாதிரியான பிரதிநிதிகள் அவர்கள். ருஷ்யப் புரட்சியானது, பாட்டாளிகள் முதலாளித்துவத்தைத் தோற்கடித்த பின் கோடானு கோடியான உழைக்கும் விவசாயிகளாகிய மிகவும் சிதறுண்ட பெருந்திரளுடன் எப்படி ஒன்றுபட்டு வெற்றிகரமாய் மத்திய காலத்திய ஒடுக்குமுறையை எதிர்த்துக் கிளம்பினர் என்பதைக் காட்டிற்று. நமது சோவியத் குடியரசு இப்பொழுது விழித்தெழும் கீழ்த்திசை மக்கள் அனைவரையும் தன் பக்கத்தில் ஒன்றுதிரட்டி, அவர்களுடன் சேர்ந்து சர்வதேச ஏகாதிபத்தியத்துக்கு எதிராய்ப் போராட்டம் நடத்தியாக வேண்டும்.

இத்துறையில், உங்களை எதிர்நோக்கும் பணி உலகின் கம்யூனிஸ்டுகளை இதன்முன் எதிர்நோக்கியிராத ஒன்றாகும்: கம்யூனிசத்தின் பொதுத் தத்துவத்தையும் நடைமுறையையும் ஆதாரமாய்க் கொண்டு நீங்கள் ஐரோப்பிய நாடுகளில் இல்லாதவையான, பிரத்தியேகமான நிலைமைகளுக்கு உங்களைத் தகவமைத்துக் கொண்டாக வேண்டும்; அந்தத் தத்துவத்தையும் நடைமுறையையும் நீங்கள் பெருவாரியான மக்கள் விவசாயிகளாய் இருக்கும் நிலைமைகளுக்கு, மூலதனத்தை அல்ல, மத்திய காலத்திய மீதமிச்சங்களை எதிர்த்துப் போராட்டம் நடத்துவதே பணியாயுள்ள நிலைமைகளுக்கு ஏற்பச் செயல்படுத்திக் கொள்ளக் கூடியோராய் இருத்தல் வேண்டும். அது கடினமான, பிரத்தியேகமான பணி; ஆனால் மிகுந்த நன்றிக்குரிய பணி, ஏனெனில் போராட்டத்தில் இது வரை பங்கெடுத்துக் கொள்ளாத வெகுஜனங்கள் அதனுள் ஈர்க்கப்பட்டு வருகிறார்கள், மற்றும் கிழக்கில் கம்யூனிஸ்டு கோஷ்டிகளை நிறுவுவதானது மூன்றாவது அகிலத்துடன்[15] மிக நெருங்கிய தொடர்பு கொள்ளும் வாய்ப்பினை உங்களுக்கு அளித்திடுகிறது. உலகின் முன்னிலைப் பாட்டாளிகள் கீழ்த்திசை உழைப்பாளர்களும் சுரண்டப்படுவோருமான வெகுஜனங்களுடன், பல சந்தர்ப்பங்களில் மத்திய காலத்திய நிலைமைகளில் இருப்போரான இவர்களுடன் கூட்டணி கொள்வதற்கான பிரத்தியேக வடிவங்களை நீங்கள் கண்

டறிந்து கொண்டாக வேண்டும். பெரிய அளவிலும் பெரிய நாடுகளிலும் நீங்கள் செய்யப் போவதை, நாங்கள் எங்கள் நாட்டில் சிறிய அளவில் செய்திருக்கிறேம். உங்களுடைய இந்தப் பணியை நீங்கள் வெற்றிகரமாய்ச் செய்திடுவீர்க ளென்று நம்புகிறேன். இங்குள்ள நீங்கள் பிரதிநிதிகளாயிருக் கும் கீழ்த்திசைக் கம்யூனிஸ்டு நிறுவனங்களின் பயனுய், நீங்கள் முன்னேறிய புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்துடன் தொடர்பு கொண்டிருக்கிறீர்கள். ஒவ்வொரு நாட்டிலும் அந் நாட்டு மக்கள் புரிந்து கொள்ளும் மொழியில் கம்யூனிஸ்டுப் பிரசாரம் நடைபெறும்படித் தொடர்ந்து உறுதி செய்து கொள்வது உங்கள் கடமையாகும்.

உலகின் முன்னேறிய நாடுகள் அனைத்தின் பாட்டாளி வர்க்கத்தால் மட்டும்தான் இறுதி வெற்றி கிட்டும்படிச் செய்ய முடியும் என்பது கூறுமலே விளங்கும் ஒன்று. ருஷ்யர் களாகிய நாங்கள் இவ்வேலையைத் துவக்கிவைக்கிறேம்; பிரிட் டிஷ், பிரெஞ்சு அல்லது ஜெர்மன் பாட்டாளி வர்க்கம் இவ்வேலையை உறுதி பெறச் செய்யும். ஆனல் ஒடுக்கப்பட்ட எல்லாக் காலனி மக்களின், முதன்மையாகவும் முக்கியமாக வும் கீழ்த்திசை உழைப்பாளி மக்களின் உதவி இல்லாமல், அவர்களால் வெற்றி பெற முடியாதென்பது தெரிகிறது. கம்யூனிசத்துக்குக்கான மாற்றத்தினை முன்னணிப் படை யினல் மட்டும் சாதித்துவிட முடியாது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். உழைப்பாளி வெகுஜனங்களை —அவர்கள் வந்தடைந்துள்ள வளர்ச்சி மட்டம் எதுவாயி னும்—தட்டியெழுப்பிப் புரட்சிகரச் செயற்பாட்டிலும் சுயேச்சையான செயல்களிலும் நிறுவன ஒழுங்கமைப்பிலும் ஈடுபடச் செய்தல்; அதிக அளவு முன்னேறிய நாடுகளின் கம்யூ னிஸ்டுகளுக்காக வகுக்கப்பட்ட மெய்யான கம்யூனிஸ்டுப் போதனையை ஒவ்வொரு நாட்டின் மக்களது மொழியிலும் பெயர்த்திடல், உடனடியாய்ச் செய்யப்பட வேண்டிய அந்த நடைமுறை பணிகளை நிறைவேற்றுதல், பிற நாடுகளின் பாட் டாளிகளுடன் ஒரு பொதுப் போராட்டத்தில் ஒன்றுசேர்தல் ஆகிய இவையே நம்முன்னுள்ள பணிகள்.

பிரச்சினைகள் இத்தகையனவே. இவற்றுக்கான தீர்வை எந்தக் கம்யூனிஸ்டுப் புத்தகத்திலும் காண்பதற்கில்லை,

ருஷ்யா துவக்கியுள்ள பொதுப் போராட்டத்திலேதான் நீங்கள் காண்பீர்கள். உங்களுடைய சொந்த அனுபவத்தின் வாயிலாகவே நீங்கள் இப்பிரச்சினையைச் சமாளித்துத் தீர்வு கண்டாக வேண்டும். அதில் ஒரு புறத்தில், பிற நாடுகளின் தொழிலாளி மக்கள் அனைவரது முன்னணிப் படையுடனுள்ள நெருங்கிய கூட்டணியும், மறுபுறத்தில், இங்கே நீங்கள் பிரதிநிதித்துவம் செய்யும் கீழ்த்திசை மக்கள்பால் சரியான அணுகு முறையைக் கண்டு கொள்வதற்குரிய உங்கள் வல்லமையும் உங்களுக்குத் துணை புரியும். நீங்கள் முதலாளித்துவத் தேசியவாதத்தை உங்களுக்கு அடித்தளமாய்க் கொள்ள வேண்டியிருக்கும்; இந்த முதலாளித்துவத் தேசியவாதம் இம்மக்களிடையே விழித்தெழுந்து வருகிறது, விழித்தெழுந்தே ஆக வேண்டும். இந்த முதலாளித்துவத் தேசியவாதம் வரலாற்று வழிப்பட்ட நியாயமுடையதாகும். அதேபோதில் நீங்கள் ஒவ்வொரு நாட்டின் உழைப்பாளர்களும் ஒடுக்கப்பட்டவர்களுமான வெகுஜனங்களிடம் செல்வதற்கான உங்கள் வழியைக் கண்டு கொண்டாக வேண்டும்; சர்வதேசப் புரட்சியின் வெற்றிதான் அவர்கள் விடுதலை பெறுவதற்கான ஒரேயொரு நம்பிக்கைச் சுடராகும் என்பதையும், சர்வதேசப் பாட்டாளி வர்க்கம்தான் கீழ்த்திசை உழைப்பாளர்களும் சுரண்டப்பட்டோருமான கோடானு கோடியான மக்களுக்கு ஒரேயொரு கூட்டாளியாகும் என்பதையும் அவர்களுக்குப் புரியும்படியான மொழியில் சொல்லியாக வேண்டும்.

இதுவே உங்களை எதிர்நோக்கும் பிரம்மாண்டப் பணி. புரட்சிக்கும் புரட்சி இயக்கத்தின் வளர்ச்சிக்கும்—இது குறித்து ஐயப்பாட்டிற்கு இடமே இல்லை—உரிய இந்தச் சகாப்தத்தின் பயனாய் இந்தப் பணி கீழ்த்திசைக் கம்யூனிஸ்டு நிறுவனங்களது கூட்டு முயற்சிகளால் வெற்றிகரமாய்ச் செய்து முடிக்கப்பட்டு, சர்வதேச ஏகாதிபத்தியத்தின் மீது முழுநிறைவான வெற்றியினால் முடிசூட்டப் பெறும்.

ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியினது
(போல்ஷிவிக்குகள்) மத்தியக் கமிட்டியின்
செய்தியறிக்கை, இதழ் 9,
1919, டிசம்பர் 20

பதிப்பாளர் குறிப்புகள்

1 கிழக்கு மக்களது கம்யூனிஸ்டு நிறுவனங்களுடைய இரண்டாவது அனைத்து ருஷ்யக் காங்கிரஸ் மாஸ்கோவில் 1919 நவம்பர் 22லிருந்து டிசம்பர் 3 வரை நடைபெற்றது. ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சி (போல்ஷிவிக்குகள்) மத்தியக் கமிட்டியில் கீழ்த்திசை மக்களின் கம்யூனிஸ்டு நிறுவனங்களுடைய மத்தியக் குழுவின் முன்முயற்சி பேரில் கூட்டப் பட்டது.

நவம்பர் 22ல் காங்கிரசின் துவக்க நாளன்று லெனின் நடப்பு நிலைமை குறித்து உரை நிகழ்த்தினர்.—தலைப்புப் பக்கம்.

2 கொல்ச்சாக் [Kolchak], அ. வ. *(1873-1920)*—ஜாரிஸ்டுக் கடற்படைத் தலைவர்; முடியாட்சிவாதி; *1918-19*ல் ருஷ்யாவில் எதிர்ப்புரட்சிக்குத் தலைமை தாங்கியோரில் ஒருவர்; ஆன்டான்ட் அரசுகளின் கையாள். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப்பின், அமெரிக்க ஐக்கிய நாடு, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் ஆதரவுடன் தன்னை ருஷ்யாவின் தலைமை அதிபதியாகப் பிரகடனம் செய்து கொண்டு, உரால், சைபீரியா, தொலைக் கிழக்கு ஆகியவற்றில் முதலாளிகள், நிலப்பிரபுக்களது இராணுவச் சர்வாதிகாரத்துக்குத் தலைமை தாங்கினர். செஞ்சேனையின் தாக்குதல்களும் கொரில்லா இயக்கத்தின் வளர்ச்சியும் கொல்ச்சாக் ஆதிக்கத்தை முறியடித்தன. —*4*

3 யுதேனிச் [Yudenich, N. N.], நி. நி. *(1862-1933)*—ஜாரிஸ்டு ஜெனரல், அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப்பின் ருஷ்யாவின் வட-மேற்குப் பிரதேசத்தில் இயங்கிய வெண் படைகளுக்குத் தலைமை தாங்கினர். ஆன்டான்ட் அரசுகள் பெரிய அளவில் அவருக்கு உதவியளித்தன. *1919*ல் பெத்ரோகிராதைக் கைப்பற்ற இரு முறை முயன்ருர், ஆனல் தோல்வியடைந்தார். *1919* நவம்பரில் செஞ்சேனையால்

தோற்கடிக்கப்பட்டபின் பின்வாங்கி எஸ்தோனியாவுக்குச் சென்று பிறகு இங்கிலாந்துக்கு ஓடிவிட்டார்.—4

4 **தெனீக்கின்** [Denikin], அ. இ. *(1872-1947)*—ஜாரிஸ்டு ஜெனரல்; அந்நிய இராணுவத் தலையீட்டின் போதும் உள்நாட்டுப் போரின்போதும் *(1918-20)* வெள்ளைப்படைகளின் தலைவர்களில் ஒருவர்; ஆங்கில, பிரெஞ்சு, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் கையாள். தெற்கு ருஷ்யாவில் சோவியத்து எதிர்ப்பு வெள்ளைப்படைகளின் தளபதி. அவருடைய படைகள் செஞ்சேனையால் முறிக்கப்பட்டபின் *(1920* மார்ச் மாதத்தில்), வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்தார்.—*4*

5 **இரண்டாவது அகிலம்** — சோஷலிஸ்டுக் கட்சிகளின் ஒரு சர்வதேசச் சங்கம்; அது *1889*ல் நிறுவப்பெற்றது. ஏகாதிபத்திய சகாப்தம் வந்ததைத் தொடர்ந்து அதில் சந்தர்ப்பவாதப் போக்குகள் மேலோங்கி ஆதிக்கம் வகிக்கத் தொடங்கின. *1914*ல் முதலாவது உலக யுத்தம் கிளம்பியபோது இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாதத் தலைவர்கள் தத்தம் நாடுகளைச் சேர்ந்த முதலாளித்துவ அரசாங்கங்களின் ஏகாதிபத்தியக் கொள்கையை வெளிப்படையாக ஆதரித்தனர். இரண்டாவது அகிலம் உடைந்து போயிற்று.—*6*

6 இங்கு குறிக்கப்படுவது சமாராவில் *1918* ஜூன் *8*ல் அமைக்கப்பட்ட வெள்ளைப்படை சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர், மென்ஷிவிக்குகளது அரசாங்கம் (அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்களின் கமிட்டி என்பதாய் இது அழைக்கப்பட்டது). செக்கோஸ்லோவாக் துருப்புக்கள் சமாராவைப் பிடித்துக் கொண்டபின் இந்த அரசாங்கம் அமைக்கப்பட்டது. செக்கோஸ்லோவாக் துருப்புக்களின் துணை கொண்டு இந்த அரசாங்கம் *1918* ஆகஸ்டுக்குள் வோல்கா, உரால் பிராந்தியங்களில் பல மாவட்டங்களைப் பிடித்துக் கொண்டது. இந்த எதிர்ப்புரட்சி அரசாங்கம் *1918* இலையுதிர் காலத்தில் தோற்கடிக்கப்பட்டு வீழ்த்தப்பட்டது.—*6*

7 **மென்ஷிவிக்குகள்** — ருஷ்யாவின் சமூக-ஜனநாயகக் கட்சியில் இருந்த குட்டிபூர்ஷுவா, சந்தர்ப்பவாதப் போக்கின் ஆதரவாளர்கள். தொழிலாளர்கள்மீது முதலாளித்துவச் செல்வாக்கு செயல்படக் கருவிகளாய் இருந்தவர்கள். ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரசில் *(1903)* கட்சியின் மத்திய அமைப்

புக்களுக்காக நடைபெற்ற தேர்தலில் இவர்கள் சிறுபான்மை வாக்குகளைப் பெற்று சிறுபான்மையினர் (மென்ஷின்ஸ்த்வோ) ஆனதும் மென்ஷிவிக்குகள் என்று பெயர் பெற்றனர். லெனின் தலைமையில் அமைந்த புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகள் பெரும்பான்மையினர் (போல்ஷின்ஸ்த்வோ) ஆனதால் போல்ஷிவிக்குகள் என்று அழைக்கப்படலாயினர். *1917* பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியைத் தொடர்ந்து மென்ஷிவிக்குகள் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் பதவிகள் ஏற்று, இந்த அரசாங்கத்தின் ஏகாதிபத்தியக் கொள்கையை ஆதரித்தனர். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு மென்ஷிவிக்குகள் பகிரங்கமாகவே எதிர்ப்புரட்சிக் கட்சியாகி சோவியத் ஆட்சியதிகாரத்தை எதிர்த்துச் சதிகளும் கலகங்களும் செய்தனர்.—*6*

8 **சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சி** — ருஷ்யாவில் *1901* இறுதியிலும் *1902* துவக்கத்திலும் பல்வேறு நரோத்னிக் கோஷ்டிகளையும் இணைத்து நிறுவப்பட்ட குட்டிபூர்ஷுவா கட்சி. முதல் உலகப் போரின்போது சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரில் பெரும்பாலோர் சமூக-தேசியவெறிவாதக் கருத்துக்களை ஆதரித்தனர்.

1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியைத் தொடர்ந்து சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் தலைவர்கள் இடைக்கால அரசாங்கத்தின் உறுப்பினர்களாய் இருந்தனர். அந்நிய இராணுவத் தலையீட்டின்போதும். உள்நாட்டுப் போரின்போதும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் எதிர்ப்புரட்சியின் சதிகாரச் செயல்களில் ஈடுபட்டனர். —*6*

9

வெர்சேய் உடன்படிக்கை [The Treaty of Versailles] — முதல் ஏகாதிபத்திய உலகப் போருக்கு முடிவு கட்டிய இந்த உடன்படிக்கை ஒரு புறம் அமெரிக்க ஐக்கிய நாடு, பிரிட்டிஷ் சாம்ராஜ்யம், பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான் இவற்றுக்கும் இவற்றுடன் கூட்டு கொண்ட அரசுகளுக்கும், மறுபுறம் ஜெர்மனிக்கும் இடையே *1919* ஜூன் *28*ல் கையொப்பமிடப்பட்டது. முதலாளித்துவ உலகு வெற்றி பெற்ற நாடுகளிடையே பகிர்ந்து கொள்ளப்பட்டதற்குச் சட்ட அந்தஸ்து அளிப்பதற்காகவும், சோவியத் ருஷ்யாவை நசுக்குவதற்கும் உலகெங்கும் புரட்சி இயக்கத்தைத் தோற்கடிப்பதற்கும் ஏற்றவாறு சர்வதேச உறவுகளின் அமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்காகவும் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையே ஆகும் இது.—*10*

10 **பிரேஸ்த் உடன்படிக்கை** — சோவியத் ருஷ்யாவுக்கும் நால்வர் கூட்டணிக்கும் (ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி, பல்கேரியா, துருக்கி ஆகியவற்றுலானது) இடையே பிரேஸ்த்-லித்தோவ்ஸ்கில் 1918 மார்ச் 3ல் கையெழுத்தாகி, மார்ச் 15ல் சோவியத்துகளின் நான்காவது (சிறப்பு) அனைத்து-ருஷ்யாவின் காங்கிரசால் அங்கீகரிக்கப்பட்ட சமாதான உடன்படிக்கையாகும். இதன் ஷரத்துகள் சோவியத் ருஷ்யாவுக்கு மிகவும் பாதகமாயிருந்தன.

இருந்தாலும் பிரேஸ்த் உடன்படிக்கை சோவியத் குடியரசுக்குச் சிறிது அவகாசமளித்தது; சிதைந்து வந்த பழைய சேனையைக் கலைக்கவும் புதிய செஞ்சேனையைத் தோற்றுவிக்கவும் வாய்ப்பு தந்தது; சோவியத் அரசு சோஷலிச நிர்மாணத்தை மேற்கொள்ளவும் உள்நாட்டு எதிர்ப்புரட்சிக்கும் அயல்நாட்டுத் தலையீட்டுக்கும் எதிரான போராட்டத்துக்கு சக்திகளை ஒன்றுதிரட்டவும் வகை செய்து கொடுத்தது.

ஜெர்மனியில் 1918 நவம்பரில் புரட்சி நடைபெற்று முடியாட்சி கவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து நவம்பர் 13ல் அனைத்து ருஷ்யாவின் மத்தியச் செயற் குழு கொள்ளைக்கார பிரேஸ்த் உடன்படிக்கையை நிராகரித்தது.—10

11 **ஆன்டான்ட்**—இச்சொல் 1907ல் உருவான ஏகாதிபத்திய அரசுகளது (பிரிட்டன், பிரான்சு, ருஷ்யா ஆகியவை) கூட்டைக் குறிப்பதற்கு உபயோகிக்கப்படுகிறது. இக்கூட்டு மற்ருெரு ஏகாதிபத்தியக் கூட்டான முக்கூட்டுக்கு (ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி, இத்தாலி) எதிராக அமைக்கப்பட்டது. ''ஆன்டான்ட்'' என்னும் பெயர் பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் இடையே 1904ல் ஏற்பட்ட "Entente cordiale" (நேசக் கூட்டு) என்றழைக்கப்பட்ட ஒப்பந்தத்திலிருந்து வந்ததாகும். முதல் உலக ஏகாதிபத்தியப் போரின் போது இந்த ஆன்டான்டில் அமெரிக்க ஐக்கிய நாடும் ஜப்பானும் வேறு பல நாடுகளும் சேர்ந்து கொண்டன. அக்டோபர் புரட்சியைத் தொடர்ந்து, இக்கூட்டின் பிரதான உறுப்பினர்களான பிரிட்டனும் பிரான்சும் அமெரிக்க ஐக்கிய நாடும் ஜப்பானும் சோவியத் குடியரசுக்கு எதிராக நடத்தப்பட்ட ஆயுதமேந்திய தலையீட்டின் மூலவர்களாகவும் சூத்திரதாரிகளாகவும் செயல்பட்டன.—12

12 ருஷ்ய சோவியத் சோஷலிசக் கூட்டாட்சிக் குடியரசின் அரசியல் சட்டம் இங்கு குறிப்பிடப்படுகிறது. இச்சட்டம் சோவியத்துகளின் ஐந்தாவது அனைத்து ருஷ்யக் காங்கிரசால்

ஏற்கப்பட்டது. 1918 ஜூலை 19ல் இது வெளியிடப்பட்டது. வெளியிடப்பட்ட தருணம் முதல் செயலுக்கு வரும் அடிப்படைச் சட்டமாய்ப் பிரகடனம் செய்யப்பட்டது. —13

13 மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரின் நேரடிப் பங்குடன் ஆன்டான்ட் ஏகாதிபத்தியவாதிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட செக்கோஸ்லோவாக் படையின் எதிர்ப்புரட்சிக் கலகம் இங்கு குறிப்பிடப்படுகிறது.

செக்கோஸ்லோவாக் படை, மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்கு முன்பு ருஷ்யாவில் செக், ஸ்லோவாக் போர்க்கைதிகளைக் கொண்டு நிறுவப்பட்டதாகும். ருஷ்யாவில் சோவியத் ஆட்சியதிகாரம் அமைக்கப்பட்ட பிறகு செக்கோஸ்லோவாக் தேசியக் கவுன்சிலின் அதிபர் தோமஸ் மசாரிக் இப்படை பிரெஞ்சு சேனையின் ஒரு பகுதியாகுமென்று பிரகடனம் செய்தார். இப்படையை பிரான்சுக்கு அனுப்பிவைக்கும் பிரச்சினையை ஆன்டான்ட் பிரதிநிதிகள் எழுப்பினர். இப்படை தனது ஆயுதங்களைச் சரணடைக்கும் பட்சத்தில் இதை விளாதிவஸ்தோக் வழியாய் பிரான்சுக்கு அனுப்பி வைக்க சோவியத் அரசாங்கம் ஒத்துக்கொண்டது. ஆனல் இந்தப் படையின் எதிர்ப்புரட்சித் தளகர்த்தர்கள் சோவியத் அரசாங்கத்துடனன ஒப்பந்தத்தை மீறிச் சென்று, சோவியத் அதிகாரத்துக்கு எதிராய் 1918 மே மாத இறுதியில் கலகம் துவக்கினர். வெள்ளைப் படையினர், குலாக்குகள் இவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு செயல்பட்டு செக்கோஸ்லோவாக் படை உராலிலும் வோல்கா பிரதேசத்திலும் சைபீரியாவிலும் ஒரு பெரிய பகுதியைக் கைப்பற்றியது. இவ்விடங்களில் எல்லாம் அது முதலாளித்துவ ஆட்சியை மீண்டும் நாட்டிற்று.

ருஷ்யாவிலிருந்த செக்கோஸ்லோவாக் கம்யூனிஸ்டுக் கோஷ்டிகளின் மத்தியச் செயற் குழு இந்தக் கலகம் ஆரம்பமானதும் ஜூன் 11ல் இப்படையின் படையாட்களுக்கு வேண்டுகோள் விடுத்தது. இந்தக் கலகத்தின் எதிர்ப்புரட்சித் தன்மையை அது இவ்வேண்டுகோளில் அம்பலப்படுத்தி, செக், ஸ்லோவாக் தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் இக்கலகத்தை அடக்கும்படியும், செஞ்சேனையின் செக்கோஸ்லோவாக் படைப்பிரிவுகளில் சேர்ந்து கொள்ளும்படியும் அழைப்பு விடுத்தது. சுமார் 12,000 செக், ஸ்லோவாக் படையாட்கள் செஞ்சேனையின் அணிகளில் சேர்ந்து போராடினர்.

1918 இலையுதிர் காலத்தில் செஞ்சேனை வோல்கா

பிரதேசத்தை விடுவித்தது. கொல்ச்சாக்கின் கலகம் நசுக்கப்பட்டதும் 1919ல் செக்கோஸ்லோவாக் படையின் எதிர்ப்புரட்சிக் கலகம் முடிவாய் அடக்கப்பட்டது.—14

14 1919 மார்ச் 18-23ல் நடைபெற்ற ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியின் (போல்ஷிவிக்குகள்) 8ஆவது காங்கிரசில் ஏற்கப்பட்ட கட்சியின் வேலைத்திட்டம் இங்கு குறிக்கப்படுகிறது.—16

15 மூன்றுவது அகிலம், கம்யூனிஸ்டு அகிலம் என்பது பல்வேறு நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளை ஒன்றுபடுத்திய புரட்சிகரமான, ஒரு சர்வதேச, பாட்டாளி வர்க்க ஸ்தாபனமாகும். அது 1919லிருந்து 1943வரை இருந்தது.

முதலாவது உலக யுத்தம் வந்தபோது இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாத தலைவர்கள் சோஷலிசத்துக்குச் செய்த துரோகத்தினுலும் இரண்டாவது அகிலத்தின் வீழ்ச்சியாலும் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் ஏற்பட்ட பிளவு காரணமாக, மூன்றுவது அகிலத்தை நிறுவுவது வரலாற்றுரீதியாக இன்றியமையாதது ஆயிற்று. கம்யூனிஸ்டு அகிலத்தை நிறுவுவதில் லெனின் முக்கியமான பாத்திரம் வகித்தார்.

கம்யூனிஸ்டு அகிலம் எல்லா நாடுகளின் உழைப்பாளி மக்களிடையேயும் உறவுகளை மீண்டும் நிலைநாட்டிப் பலப்படுத்தியது, உலகத் தொழிலாளி வர்க்க இயக்கத்திலேயுள்ள சந்தர்ப்பவாதத்தை அம்பலப்படுத்தவும் உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் போர்த்தந்திரங்களையும் செயல் தந்திரங்களையும் வகுத்து அமைக்கவும் அது உதவியது.—19

வாசக நேயர்களுக்கு

இந்த மொழிபெயர்ப்பைப் பற்றியும் இந்தப் புத்தகத்தின் தயாரிப்பைப் பற்றியும் வாசகநேயர்களின் கருத்தை ''முன்னேற்றப் பதிப்பகம்'' மகிழ்வுடன் வரவேற்கும்.

கடிதங்களைத் தயை செய்து "Progress Publishers, 21, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

6, நல்லதம்பி செட்டித் தெரு, சென்னை-2

ஷோ-ரூம்

6/30, மவுண்ட் ரோடு, சென்னை-2

கிளைகள்

80, மேலக் கோபுர வீதி, மதுரை-1

87/89, ஒப்பனக்கார வீதி, கோயமுத்தூர்-1

சிங்காரத்தோப்பு, திருச்சிராப்பள்ளி-8

பஸ் நிலையம், தஞ்சாவூர்

1972ல் நமது தமிழ் வெளியீடு:

கார்ல் மார்க்ஸ், ''கூலி, விலை, லாபம்''

வி. இ. லெனின், ''அரசும் புரட்சியும்'' (அரசைப் பற்றிய மார்க்சியத் தத்துவமும் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகளும்)

வி.இ.லெனின், ''சோவியத் ஆட்சியதிகாரம் என்பது என்ன?'' கட்டுரைகளும் சொற்பொழிவுகளும்)

வி.இ. லெனின், ''திருத்தல்வாதம் எதிர்ப்போம், மார்க்சியம் காப்போம்''

வி.இ. லெனின், ''போர்த்தந்திரம் பற்றிய கடிதங்கள்'' (கட்டுரைத் தொகுதி)

நி. மிஹாய்லவ், சோவியத் நாட்டைச் சுற்றிப் பார்ப்போம்''

В. И. ЛЕНИН

ДОКЛАД НА II ВСЕРОССИЙСКОМ СЪЕЗДЕ КОММУНИСТИЧЕСКИХ ОРГАНИЗАЦИЙ НАРОДОВ ВОСТОКА

На тамильском языке